©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 7.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 34] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 24, 2022
ஆவணி 8, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 124, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4(2)]த் துறை, 22 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 20.02.1991ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 172 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ/1142/91ஆம் எண் அறிவிக்கையில் திருவத்திபுரம் நகராட்சிப் பகுதியை உள்ளடக்கிய திருவத்திபுரம் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள அத்தகைய பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவன:–

| "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் | |
|---|---|
| 53. | வடதண்டலம் |
| 51. | பைங்கிணர் |
| 59. | கீழ்ப்புதுப்பாக்கம் |
| 58. | புளியரம்பாக்கம் |
| 159. | அனக்காவூர் |
| 162. | தவசி |
| 160. | கீழ்மட்டை |
| 161. | வெள்ளை |
| 164. | செய்யாற்றைவென்றான்.". |

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் (எவையேனுமிருப்பின்), மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை

எழுத்துப்பூர்வமாக 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 125, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4(2)]த் துறை, 22 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 12.01.2000 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 6ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ.ந/30/2000ஆம் எண் அறிவிக்கையில் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள கூத்தாநல்லூர் வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கூத்தாநல்லூர் நகராட்சியுடன், பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவான:–

**"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்.**

19. அதங்குடி
17. ஆய்குடி
18. சேகரை
16. வக்ராநல்லூர்
26. சித்தனக்குடி
25. அகரவேளுக்குடி
34. பழையனூர்
43. சாத்தனூர்
36. கொத்தங்குடி
20. வெள்ளக்குடி."

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின் மேற்சொன்ன சட்டத்தின் 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 131, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4(2)]த் துறை, 22 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 06.11.1974ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 557ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II(2)/ஊ.வ.உ/4633/74 ஆம் எண் அறிவிக்கையில் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள அத்தகைய பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவான:–

**"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்.**

20. நாகலூர்
67. மஞ்சக்குட்டை
9. அசம்பூர்
6. தலைச்சோலை
12. மைலப்பட்டி
61. புத்தூர்
05. பில்லேரி
66. செம்மடுவு."

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் (எவையேனுமிருப்பின்), மேற்சொன்ன சட்டத்தின் 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், எழுத்துப்பூர்வமாக அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**ஹிதேஸ்குமார். எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மொழிபெயர்ப்பு, மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை.*

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

*[அரசாணை (ப) எண் 95, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 7 மார்ச் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதி பின்வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கபடுமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக 'அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

*வரைவு அறிவிக்கை*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 26–12–2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–ல், 1179 மற்றும் 1180 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொவேவா/1092/2018 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் சவ்வரிசி தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

*விவர அட்டவணை*

**சவ்வரிசி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | உரிப்பவர்கள் (செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்) | 70 கிலோ கிராம் பை ஒன்றுக்கு 31.37 |
| 2. | நசுக்கி, வகைப்படுத்தி, அரைத்து, வறுக்கும் மற்றும் ஏனைய பல்வகை தொழில்களில் பணியமர்த்தப்படும் தொழிலாளர்கள் | |
| | நிலை–I | 312.50 நாளொன்றுக்கு |
| | நிலை–II | 301.50 நாளொன்றுக்கு |
| 3. | ஒட்டுநர்கள் | |
| | நிலை–I | 8456.00 மாதமொன்றுக்கு |
| | நிலை–II | 7924.00 மாதமொன்றுக்கு |

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 4. | எழுத்தர்கள்<br>நிலை—I<br>நிலை—II | <br>8571.00 மாதமொன்றுக்கு<br>8139.00 மாதமொன்றுக்கு |
| 5. | காவலாள் | 7924.00 மாதமொன்றுக்கு |

***விளக்கங்கள்:*** — **1.** (i) உடல்திறன், செயல்திறன், திறமை மற்றும் செய்யும் வேலையின் அளவு மற்றும் பணிமூப்பு நிலை அடிப்படையில் நசுக்குதல், வகைப்படுத்துதல், அரைத்தல், வறுத்தல் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டவர்கள் நிலை—I மற்றும் நிலை—II தொழிலாளர்களாக வகைப்படுத்தப்படுகிறார்கள்.

(ii) ஒட்டுநர்களை நிலை—I மற்றும் நிலை—II ஆக வகைப்படுத்துதல்:—

நிலை—I: ஐந்து ஆண்டுகள் முறையான பணி நிறைவு செய்தவர்கள்.

நிலை—II: ஐந்து ஆண்டுகள் முறையாக பணி நிறைவு செய்யாதவர்கள்.

(iii) எழுத்தர்களை நிலை—I மற்றும் நிலை—II ஆக வகைப்படுத்துதல்:—

நிலை—I: ஐந்து ஆண்டுகள் முறையாக பணி நிறைவு செய்தவர்கள்.

நிலை—II: ஐந்து ஆண்டுகள் பணி நிறைவு செய்யாதவர்கள்.

**(2) அகவிலைப்படி**: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன், தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், மாதமொன்றுக்கு ரூ. 49.20 (நாற்பத்து ஒன்பது ரூபாய் இருபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளன்று அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) (i) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (ப) எண். 155, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 7 ஏப்ரல் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக 'அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

***வரைவு அறிவிக்கை***

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23–1–2019ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு–2இல், 112 முதல் 114 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் II(2)/தொவே/96/2019 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டும் அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் பொது மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

***விவர அட்டவணை***

பொது மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பணியில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *தொழிலாளர் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *3)* |
| 1. | இயந்திரக் கம்மியர் | 11627.00 |
| 2. | சுற்றுலாச் சீருந்து இயக்குபவர்களிடம் பணிபுரிபவர்கள் உள்ளிட்ட ஓட்டுநர்கள் | 11306.00 |
| 3. | உதவி இயந்திரக் கம்மியர் | |
| 4. | பொருத்துநர் | |
| 5. | மின்கம்மியர் | |
| 6. | ஆய்வாளர் | 11306.00 |
| 7. | எழுத்தர் | 11306.00 |
| 8. | நடத்துநர் | 11045.00 |
| 9. | உதவி பொருத்துநர் | |
| 10. | சுத்தியல் அடிப்பவர் | 10716.00 |
| 11. | உயவு பசையிடுபவர் | |
| 12. | ஏவலாள் | 10571.00 |
| 13. | துப்புரவுப் பணியாளர் | |
| 14. | காவலாள் | |
| 15. | பெருக்குபவர் | |
| 16. | கொல்லர்/கருமார் | 11306.00 |
| 17. | தச்சர் | |
| 18. | அடைப்பு வேலை செய்பவர் (Tinker) | |
| 19. | கடைசல் பணியாளர் | |
| 20. | உள் உறையிடுபவர் (Liner) | |
| 21. | வர்ணம் பூசுபவர் (தெளிப்பு முறை) | |

| தொடர் எண் | தொழிலாளர் வகைகள் | மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.) |
|---|---|---|
| (1) | (2) | 3) |
| 22. | பற்றவைப்பவர் | 11306.00 |
| 23. | தையற் பணியாளர் | |
| 24. | வார்ப்படப் பணியாளர் | |
| 25. | வர்ணம் பூசுபவர் (பெயிண்டர்) | 11174.00 |
| 26. | டயர் பணியாளர் | 11045.00 |
| 27. | மின்கலப் பணியாளர் | |
| 28. | வல்கனைசர் மற்றும் அதுபோன்ற பணியாளர்கள் | |
| 29. | **தள மேற்பார்வை:** | 11627.00 |
| | (i) வாகனங்கள் நிறுத்துவதை முறைப்படுத்துதல்<br>(ii) வாகனங்கள் மற்றும் பணி முற்றத்தைச் சுத்தம் செய்தல்<br>(iii) வாகனங்களைக் கழுவுதல் மற்றும் மசகெண்ணெயிடுதல்<br>(iv) பழுது சொல்லப்பட்ட வாகனங்களை பயணச் சோதனையிடல் | |
| 30. | அரசு தொழில் நுட்பத் தேர்வில் தட்டச்சு உயர்நிலையில் தேர்ச்சிப் பெற்ற தட்டச்சர் | 11627.00 |
| 31. | அரசு தொழில் நுட்பத் தேர்வில் தட்டச்சு கீழ்நிலையில் தேர்ச்சிப் பெற்ற தட்டச்சர் | 11461.00 |
| 32. | பண்டகசாலைக் காப்பாளர் | |
| 33. | ஷராப் (Shroff) அல்லது காசாளர் | |
| 34. | பணிமனை தொடக்குநர் (டிப்போ ஸ்டார்ட்டர்) | |
| 35. | இருக்கை பொருத்துநர் | |
| 36. | வாகனங்கள் நிறுத்துதல் கட்டுப்பாட்டாளர் (வாகனங்கள் நிறுத்துதலை முறைப்படுத்துதல், மேற்பார்வை, கழுவுதல், மசகெண்ணெயிடுதல்) | 11306.00 |
| 37. | இயந்திரப் பணியாளர் (மெஷினிஸ்ட்) | |
| 38. | பயணச்சீட்டு சோதனை எழுத்தர் அல்லது பதிவு செய்யும் எழுத்தர் | 11174.00 |
| 39. | மசகெண்ணெய் ஆய்வாளர் | 11174.00 |
| 40. | ரேடியேட்டர் பொருத்துநர் | |
| 41. | மின்முலாம் பூசுபவர் | |
| 42. | பணிமனை நேரக்காப்பாளர் | |
| 43. | சுருணையாளர் (வைண்டர்) | |
| 44. | நேரங்குறிப்பவர் மற்றும் வாகன நிறுத்த முகவர் | 11045.00 |
| 45. | உதவி கருமார் | |
| 46. | உதவி டயர் பணியாள் | |
| 47. | உதவி ஒட்டுவேலை செய்பவர் | |
| 48. | குற்றேவலர் (அட்டெண்டர்) | |
| 49. | உதவி மின் கம்மியர் | |
| 50. | கட்டுப்பாட்டாளர் | |
| 51. | உதவி இயந்திரப் பணியாளர் (மெஷினிஸ்ட்) | |
| 52. | உதவி பற்றவைப்பவர் | |
| 53. | உதவித் தையற் பணியாளர் | |
| 54. | பணிமனைக் கருவிகள் காப்பாளர் | |
| 55. | உதவி வண்ணம் பூசுபவர் | 10872.00 |
| 56. | மசகெண்ணெய் உதவியாள் | 10716.00 |
| 57. | பொருத்துநரின் உதவியாள் | |

| தொடர் எண் | தொழிலாளர் வகைகள் | மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.) |
|---|---|---|
| (1) | (2) | 3) |
| 58. | நிலக்கரிப் பணியாளர் | |
| 59. | உதவியாள் (ஹெல்ப்பர்) | |
| 60. | மஸ்தூர் மற்றும் அது போன்றோர் | |
| 61. | சுத்தம் செய்பவர் (சாதாரணம்) | |
| 62. | சுத்தம் செய்பவர் (சிறப்பு மற்றும் வாகன நிறுத்தங்கள்) | 10571.00 |
| 63. | தண்ணீர் சுமப்பவர் | |
| 64. | பெட்ரோல் பம்பு இயக்குபவர் | |
| 65. | வாடிக்கை திரட்டுபவர் (கான்வாசர்) | |

**விளக்கங்கள்:— (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 65.65 (அறுபத்தி ஐந்து ரூபாய் மற்றும் அறுபத்து ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து திருத்தப்பட்ட அகவிலைப்படி செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) பொது மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பணியில், செய்யும் வேலைக்கேற்ற ஊதியவீதம் பெறும் தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டால், சாதாரணமான ஒரு வேலை நாளில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் உழைப்பூதியம் உரிய வகையினருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களை காட்டிலும் குறைவாக இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) 1948ஆம் ஆண்டு குறைந்தளவு 'ஊதியங்கள்' சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 2ஆம் பிரிவைச் சேர்ந்த (h) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டவாறாக 'ஊதியங்கள்' இந்த அறிவிக்கையின் இணக்கத்திற்கான அளவுகோலாக கொள்ளப்படும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 52, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, 30 மே 2022.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளஅதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தோசித்த பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

(1) பகுதி 3 இல் (9) ஆம் இனத்திற்கு பின்னர் பின்வரும் இனம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும், அதாவது:—

"(10) பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்ட நிதியுதவி".

(2) பகுதி 17–Bக்குப் பின்னர் பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"17C பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்ட நிதியுதவி, (1) தகுதி–.

பகுதி 5 இன்படி உறுப்பினராக பெயரை பதிவு செய்துள்ள மற்றும் பகுதி 6 இன்படி மூன்று ஆண்டுகள் உறுப்பினராகவுள்ள மற்றும் குறித்த காலத்திற்கொருமுறை பதிவினைப் புதுப்பிக்கும் ஒவ்வொரு உடலுழைப்புத் தொழிலாளரும்:

இருப்பினும், அந்த உடலுழைப்புத் தொழிலாளர் அல்லது அவருடைய குடும்பத்தினர், ஏனைய யாதொரு சிமிட்டி கற்காரை வீடுகளை எந்தவொரு இடத்திலும் உடைமையாகக் கொண்டிருக்கக்கூடாது மற்றும் அரசின் ஏனைய யாதொரு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், பயனடைந்திருக்கக்கூடாது:

மேலும், உடலுழைப்புத் தொழிலாளரின் ஆண்டு வருமானம் ரூபாய் மூன்று இலட்சத்திற்குக் குறைவாக இருக்க வேண்டும் என்பதுடன், குறைந்தளவாக 300 சதுர அடி அளவிலான வீடு கட்டுவதற்கு போதுமான அளவுடைய ஒரு மனையை உடைமையாக கொண்டிருப்பதுடன், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் பெயரில் மனைக்கான முறையான பட்டா அல்லது பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் மற்றும் ஏனைய யாதொரு குடும்ப உறுப்பினரின் பெயர்களில், கூட்டுப் பட்டாவைக் (பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானம்) கொண்டிருக்க வேண்டும்.

**2. கோரிக்கை,–** பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத்தில், வீடு கட்டுவதற்கான குறைந்தளவு பிரிவின் அளவு 300 சதுர அடியாகும். இதில் பிரிவிற்கான கட்டுமான செலவு ரூ.2.76 இலட்சமும் கூடுதல் செலவாக ரூ.1.25 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும். பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத்தில், பயனாளி, ஊரகப் பகுதியில், சொந்த மனையை வைத்திருப்பாராயின், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட வரம்பு நிபந்தனைகளைப் பின்பற்றி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகைமையின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நிதியுதவித் தொகையை விடுவிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். நகர்ப் பகுதியாக இருப்பின், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், உரிய வரம்பு நிபந்தனைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக நிதியுதவித் தொகை விடுவிக்கப்படுகிறது.

பிரதம மந்திரி வீட்டு வசதித் (நகர்ப்புறம்) திட்டத்தின் கீழ், வரம்பு நிபந்தனைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பு மனையை பயனாளி தெரிவு செய்வாராயின், உயரளாவாக ரூ.4 இலட்சம் அளவிற்கு மட்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பயனாளியால் செலுத்தப்படவேண்டிய தொகையானது நிதியுதவியாக ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட கட்டுமானத் திட்ட நிதியுதவி ரூ.4 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளதை (ஒரு வீட்டிற்கான செலவாக ரூ.2.76 இலட்சம் மற்றும் கூடுதல் செலவு ரூ.1.25 இலட்சம்) பயனாளிகளுக்கான வீட்டுவசதித் திட்டத்திற்கான நிதியுதவிக்கு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3. பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே, தொடர்புடைய மாவட்டத்தின் தொழிலாளர் உதவி ஆணையரால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தொகை ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

அவையாவன:–

1. (a) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த நாளின் அடிப்படையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் உறுப்பினர்களின் மூப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அப்பட்டியலிலுள்ள உறுப்பினர்களிடையேயிருந்து பயனாளி தெரிவு செய்யப்பட வேண்டும்.

2.(b) வீட்டுவசதித் திட்டப் பயனாளிகள் நிதியுதவியைப் பெறுவதற்காக, நிதியுதவிப் பயனுக்கான இரண்டு திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தை அதாவது பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பு மனைகளிலிருந்து ஒதுக்கீடு ஆகியவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

(c) பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத் திட்டத்தில், வீட்டுமனையின் குறைந்தளவு பிரிவாக 300 சதுர அடி அளவில் இருக்க வேண்டும், இதில் ஒரு வீட்டிற்கான கட்டுமான செலவு ரூ.2.76 மற்றும் கூடுதல் செலவாக ரூ.1.25 லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும். பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத்தில், பயனாளியின் சொந்த நிலம், ஊரகப்பகுதியில் இருக்குமாயின், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகப்பகுதி) கீழ் வரையறுக்கப்பட்ட வரம்பு நிபந்தனையைப் பின்பற்றி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகைமையின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நிதியுதவித் தொகையை விடுவிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். நகர்ப்புற பகுதியாக இருப்பின், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (நகர்ப்புறம்) கீழ், உரிய வரம்பு நிபந்தனையைப் பின்பற்றி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக அத்தொகை விடுவிக்கப்படுகிறது.

**விளக்கம்,—** பயனாளிகள் பொறுப்பிலான கட்டுமானத்தில் பயன் பெறுவதற்காக, பயனாளி ஒருவர், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் பெயரில் மனைக்கான முறையான பட்டா அல்லது பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் மற்றும் ஏனைய யாதொரு குடும்ப உறுப்பினருடன் கூடிய கூட்டு பட்டாவை வைத்திருக்க வேண்டும். தகுதியுடைய பயனாளிகள், அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட தொழிலாளர் நல ஆணையரால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தற்காலிகமாக தெரிவு செய்யப்பட வேண்டும். பயனாளியின் பெயர், முகவரி, பதிவு எண், ஆதார் எண், வங்கிக் கணக்கு எண், பதிவிற்கான கால அளவு, கட்டடத் திட்டம், நிலத்தின் உரிமை போன்ற அனைத்து விவரங்களும் அந்த பட்டியலில் இருக்க வேண்டும். அந்தந்த மாவட்டத்தின், மாவட்ட உதவித் தொழிலாளர் ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்து, உரிய சரிபார்ப்பிற்குப் பின்னர், ஏனைய யாதொரு அரசுத் திட்டத்தின் கீழ், பயனாளி வீட்டு வசதி நிதியுதவியைப் பெற்றிருக்கவில்லை என்ற குறிப்புடன் சரிபார்ப்பிற்காக, உரிய ஆவணங்களுடன் அந்த விண்ணப்பத்தை, மாவட்ட ஆட்சியாளருக்கும் அதன் பின்னர், தேவையான இறுதி ஒப்புதலுக்காக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கும் அனுப்ப வேண்டும். மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு தகவல் தெரிவித்ததன் கீழ், வீட்டு வசதித் திட்டத்திற்கான இறுதி ஒப்புதல் ஆணை மற்றும் ஒப்பளிப்பு ஆணையை, வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (மனை ஊரகப் பகுதியில் இருந்தால்) அல்லது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் (மனை நகர்ப்புறப் பகுதியில் இருந்தால்) அளிக்க வேண்டும். இந்த கோரிக்கை, படிவம் L இல் விவர அட்டவணை II இல் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

(d) பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (நகர்ப்புறம்) கீழ், நெறிமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு மனையை பயனாளி தெரிவு செய்வாராயின், உயரளவான ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) அளவிற்கு மட்டுமே, பயனாளியால் செலுத்தப்பட வேண்டிய தொகையானது நிதியுதவியாக ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

**விளக்கம்,—** தகுதியுடைய பயனாளிகள், அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையரால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தற்காலிகமாக தெரிவு செய்யப்பட வேண்டும். பயனாளியின் பெயர், முகவரி, பதவி எண், ஆதார் எண், வங்கிக் கணக்கு எண், பதிவு செய்த கால அளவு முதலிய அனைத்து விவரங்களும் அந்த பட்டியலில் இருக்க வேண்டும். அதற்கிணங்க, மூப்புப் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். அந்தந்த மாவட்டத்தின், மாவட்ட உதவித் தொழிலாளர் ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), ஒவ்வொரு விண்ணப்பதத்தையும் ஆய்வு செய்து, உரிய சரிபார்ப்பிற்குப் பின்னர், ஏனைய யாதொரு அரசுத் திட்டத்தின் கீழ், பயனாளி வீட்டு வசதி நிதியுதவியைப் பெற்றிருக்கவில்லை என்ற குறிப்புடன் சரிபார்ப்பிற்காக பின்னர், ஆவணங்களுடன் அந்த விண்ணப்பத்தை, மாவட்ட ஆட்சியாளருக்கும் அதன்பின்னர், தேவையான இறுதி ஒப்புதலுக்காக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கும் அனுப்ப வேண்டும். மாவட்டத் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), வீட்டு வசதித் திட்டத்திற்கான இறுதி ஒப்புதல் ஆணை மற்றும் ஒப்பளிப்பு ஆணையுடன், தகுதியான பயனாளிகளின் பட்டியலை ஒதுக்கீடு செய்வதற்காக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் அளிப்பதற்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும். இந்த கோரிக்கை, படிவம் M இல் விவர அட்டவணை II இல் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

(e) பயனாளிகளின் எண்ணிக்கை 10,000 க்கும் மேல் இருக்குமெனில் ஆண்டொன்றுக்கு 10,000 பயனாளிகள் என்ற அளவுக்கு வரையறுக்கப்படலாம்.

(3) படிவம் – K க்குப் பின்னர், பின்வரும் படிவங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:—

**"படிவம்-L"**

**[17-C(3) 1(c) ஆம் பகுதியைக் காண்க]**

**பயனாளி பொறுப்பிலான கட்டுமானத்தில் (BLC), பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளருக்கான வீட்டு வசதித் திட்டத்திற்கான விண்ணப்பம்**

பெறுநர்:

தொழிலாளர் உதவி ஆணையர்,

(சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

———————————— மாவட்டம்.

| உரியவாறு கையொப்பமிடப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் |
|---|

| | | |
|---|---|---|
| 1. கட்டுமானத் தொழிலாளரின் பெயர் | : | |
| 2. தந்தை/கணவரின் பெயர் | : | |
| 3. பாலினம் | : | ஆண்/ பெண்/ மூன்றாம் பாலினத்தவர் |
| 4. பிறந்த தேதி / வயது | : | |
| 5. தற்போதைய முகவரி | : | |
| 6. நிரந்தர முகவரி | : | |
| 7. ஆதார் அட்டை எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. குடும்ப அட்டையின் எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |

9. கட்டுமானத் தொழிலாளரின் வகைப்பாடு :

10. பதிவு எண் மற்றும் தேதி (அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) :

11. மூன்று ஆண்டுகள் செல் திறனுள்ள பதவினை வைத்துள்ளாரா? : ஆம்/இல்லை

12. தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுள்ளதா? : ஆம்/இல்லை

13. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் :

| *தொடர் எண்.* | *குடும்ப உறுப்பினரின் பெயர்* | *உறவு முறை* | *பாலினம்* | *வயது* | *ஆதார் எண்.* |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* |
| | | | | | |

14. வங்கி விவரங்கள் :

(வங்கிக் கணக்கு புத்தகத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

(i) வங்கிக் கணக்கு எண்:

(ii) வங்கி மற்றும் கிளையின் பெயர்

(iii) IFSC குறியீடு

15. அரசின் ஏனைய யாதொரு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளாரா? : ஆம்/இல்லை

16. விண்ணப்பதாரரின் ஆண்டு வருமானம் (கிராம நிருவாக அலுவலர்/வருவாய் ஆய்வாளரால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் அசலாக இணைக்கப்பட வேண்டும்)

17. விண்ணப்பதாரர் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு சிமிட்டி கற்காரை வீடு வேறு எங்கும் சொந்தமாக உள்ளதா? : ஆம்/இல்லை

18. போதுமான அளவுடன் 300 சதுர அடியில் ஒரு மனையை சொந்தமாக வைத்துள்ளாரா? : ஆம்/இல்லை

19. விண்ணப்பதாரர் பெயரில் மனைக்கான முறையான பட்டா அல்லது ஏனைய யாதொரு குடும்ப உறுப்பினருடன் கூடிய கூட்டுப் பட்டாவைக் கொண்டுள்ளாரா? (பட்டாவின் நகல் இணைக்கப்பட வேண்டும்) ஆம்/இல்லை

20. கட்டட திட்ட வரைபடம் உள்ளதா? : ஆம்/இல்லை

**விண்ணப்பதாரரின் உறுதிமொழி**

மேற்சொன்ன முகவரியில் நான் வசித்து வருகிறேன் என்றும் என்னுடைய ஆண்டு வருமானம் மூன்று இலட்சத்திற்கும் குறைவாக உள்ளது என்றும் இதனால் நான் உறுதியளிக்கிறேன். எனக்கு அல்லது என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் எவருக்கும் சிமிட்டி கற்காரை வீடுகள் வேறு எங்கும் சொந்தமாக இல்லை என்றும் அரசின் ஏனைய யாதொரு வீட்டு வசதித் திட்டத்தையும் நான் பயன்படுத்தவில்லை என்றும் மேலும் இதனால் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் நான் நன்கு அறிந்த வரையில் சரியானவை மற்றும் உண்மையானவை என்று இதனால் மேலும் உறுதியளிக்கிறேன்.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் கையொப்பம்

**இணைப்புகள்:—**

1. பதிவு பெற்ற உறுப்பினரின் அடையாள அட்டையின் நகல்.
2. ஆதார் அட்டையின் நகல்.
3. குடும்ப அட்டையின் நகல்.
4. வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல்.
5. கிராம நிருவாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளரால் அளிக்கப்பட்ட அசல் வருமானச் சான்றிதழ்.
6. பட்டாவின் நகல்.
7. விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்.

"படிவம்—M"

[17—C (3) 1 (d) ஆம் பகுதியைச் காண்க]

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பு மனைகளை ஒதுக்கீடு செய்வதில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளருக்கு வீட்டு வசதித் திட்டத்திற்கான விண்ணப்பம்**

பெறுநர்:

தொழிலாளர் உதவி ஆணையர்,

(சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

————————————மாவட்டம்.

உரியவாறு கையொப்பமிடப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கட்டுமானத் தொழிலாளரின் பெயர் | : | |
| 2. | தந்தை / கணவரின் பெயர் | : | |
| 3. | பாலினம் | : | ஆண்/பெண்/மூன்றாம் பாலினத்தவர் |
| 4. | பிறந்த தேதி / வயது | : | |
| 5. | தற்போதைய முகவரி | : | |
| 6. | நிரந்தர முகவரி | : | |
| 7. | ஆதார் அட்டை எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | குடும்ப அட்டையின் எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9. | கட்டுமானத் தொழிலாளரின் வகை | : | |
| 10. | பதிவெண் மற்றும் தேதி (அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11. | மூன்று ஆண்டுகள் செல்லத்தக்க பதிவினைக் கொண்டுள்ளாரா? | : | ஆம்/இல்லை |
| 12. | அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளதா? | : | ஆம்/இல்லை |
| 13. | பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் | : | |

| *தொடர் எண்.* | *குடும்ப உறுப்பினரின் பெயர்* | *உறவு முறை* | *பாலினம்* | *வயது* | *ஆதார் எண்.* |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* |
| | | | | | |

14. வங்கி விவரங்கள்: :
(வங்கிக் கணக்கு புத்தகத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

(i) வங்கிக் கணக்கு எண்:

(ii) வங்கி மற்றும் கிளையின் பெயர்

(iii) IFSC குறியீடு

15. அரசின் ஏனைய யாதொரு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளாரா? : ஆம்/இல்லை

16. விண்ணப்பதாரரின் ஆண்டு வருமானம் (கிராம நிருவாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளரால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் அசலாக இணைக்கப்பட வேண்டும்) :

17. விண்ணப்பதாரர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் ஏனைய யாதொரு திண்காரை வீட்டினை எங்கேனும் உடைமையாகக் கொண்டுள்ளனரா? : ஆம்/இல்லை

**விண்ணப்பதாரரின் உறுதிமொழி**

மேற்சொன்ன முகவரியில் நான் வசித்து வருகிறேன் என்றும் என்னுடைய ஆண்டு வருமானம் ரூபாய் மூன்று இலட்சத்திற்கும் குறைவாக உள்ளது என்றும் இதனால் நான் உறுதியளிக்கிறேன். எனக்கு அல்லது என்னுடைய குடும்ப உறுப்பினர்களில் எவருக்கும் சிமிட்டி கற்காரை வீடுகள் வேறு எங்கும் உடைடையாக இல்லை என்று மேலும் இதனால் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டியவரையில் சரியானவை மற்றும் உண்மையானவை என்று இதனால் மேலும் உறுதியளிக்கிறேன்.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளரின் கையொப்பம்

**இணைப்புகள்:—**

1. பதிவு பெற்ற அடையாள அட்டையின் நகல்.
2. ஆதார் அட்டையின் நகல்.
3. குடும்ப அட்டையின் நகல்.
4. வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல்.
5. கிராம நிருவாக அலுவலர்/வருவாய் ஆய்வாளரால் அளிக்கப்பட்ட அசல் வருமானச் சான்றிதழ்.
6. விண்ணப்பதாரரின் கடவுச் சீட்டு அளவிலான புகைப்படம்.

*[அரசாணை (2ப) எண்.44, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 10 ஜூன் 2022.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 9—3—2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2—இல் 167 முதல் 169 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2).தொ.வே/185/2016 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக ஆலோசனை குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் மின்னணு தொழிலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**மின்னணு தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு**

| பணியாளர்களின் வகைகள் | | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) | |
|---|---|---|---|
| (1) | | (2) | |
| | | மண்டலம்—அ<br>ரூ. காசு | மண்டலம்—ஆ<br>ரூ. காசு |
| **I. பொது வகையினர்** | | | |
| (1) | விற்பனை உதவியாளர் | 7941.00 | 7705.00 |
| (2) | கொள்முதல் உதவியாளர் | | |
| (3) | உதவியாளர் (உற்பத்தி, திட்டமிடுதல் கட்டுப்பாடு) | 8748.00 | 8433.00 |
| (4) | கணக்காளர் | | |
| (5) | சுருக்கெழுத்தர் | | |
| (6) | தட்டச்சர் | 7941.00 | 7705.00 |
| (7) | எழுத்தர் / அலுவலக உதவியாளர் | | |
| (8) | காசாளர் / பண்டகசாலை உதவியாளர் | | |
| (9) | பண்டகசாலை காப்பாளர் | 8748.00 | 8433.00 |
| (10) | நேரக் காப்பாளர் | 7941.00 | 7705.00 |
| (11) | ஓட்டுநர் | | |
| (12) | காவலாளி (Watchman) / காவலாள் (Chowkidar) /பாதுகாவலர் | 7404.00 | 7274.00 |
| (13) | ஏவலாள் / துணையாள் / அலுவலக உதவியாள் | 7134.00 | 7006.00 |
| (14) | மாலி / குடிநீர் வழங்குபவர் / தோட்டக்காரர் / பெருக்குபவர் / துப்புரவுப் பணியாளர் | 7134.00 | 7006.00 |
| (15) | வரவேற்பாளர் / தொலையச்சு அல்லது தொலைபேசி இயக்குபவர் | 7941.00 | 7705.00 |
| **II. ஏனைய வகையினர் :** | | | |
| **(அ) உயரளவு பயிற்சி பெற்றோர் :** | | | |
| (1) | பணிமனை மேற்பார்வையாளர் / கூட்டிணைப்பு மேற்பார்வையாளர் | 8748.00 | 8433.00 |
| (2) | ஆய்வகப் பகுப்பாய்வாளர் | | |
| (3) | மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய யாதொரு உயரளவு பயிற்சி பெற்ற வகையினர் | | |
| **(ஆ) பயிற்சி பெற்றோர்:** | | | |
| (1) | தர ஆய்வாளர் | 7941.00 | 7705.00 |
| (2) | தொழில் நுட்பவியலாளர் / தொழில்நுட்ப உதவியாளர் | | |
| (3) | இயந்திர கம்மியர் | | |
| (4) | அச்சு வடிவமைப்பு தயாரிப்பாளர் | | |
| (5) | வரைவாளர் | | |
| (6) | புகைப்படக் கருவியாளர் | | |
| (7) | இயந்திர தொழில்நுட்பவியலாளர் | | |
| (8) | இயந்திரம் இயக்குபவர் | | |
| (9) | அரைவையாளர் | | |
| (10) | அச்சு வடிவமைப்பு வார்ப்படம் இயக்குபவர் | | |
| (11) | அச்சு வார்ப்பவர் | | |
| (12) | பற்ற வைப்பவர் | | |
| (13) | பொருத்துநர் | | |
| (14) | கடைசல் பிடிப்பவர் | | |
| (15) | மின் கம்மியர் | | |
| (16) | வானொலி மற்றும் தொலைக்காட்சி கம்மியர் | | |

| | | | |
|---|---|---|---|
| (17) | கணினி இயக்குபவர் | | |
| (18) | வரிசைப்படுத்துபவர் | | |
| (19) | இயந்திரங்களின் பராமரிப்பு உதவியாளர்கள் (மின்னியல், மின் இயந்திரவியல், இயந்திரவியல் மற்றும் மின்னணுவியல்) | | |
| (20) | மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய பயிற்சி பெற்ற வகையினர் | | |

| | | | |
|---|---|---|---|
| **(இ) ஓரளவு பயிற்சி பெற்றோர்: கூட்டிணைப்பு செயல்பாடு:** | | | |
| (1) | கூட்டிணைப்பு தொடர்பான கம்பி சுற்றுதல்/மின்கம்பியமைத்தல்/பொருத்துதல்/ கூட்டிணைத்தல் / ஒழுங்குவித்தல் / சோதனையிடல் மற்றும் ஏனைய யாதொரு ஓரளவு பயிற்சி பெற்ற செயல்பாடுகள் (பொதுவான தகுதியுடன் அல்லது தகுதியின்மையுடன்) | | |
| (2) | பிளான்டிங் ஒருங்கிணைப்பாளர் | | |
| (3) | கூட்டிணைப்பு இயக்குபவர் | 7404.00 | 7274.00 |
| (4) | அழுத்தக் கருவி இயக்குபவர் | | |
| (5) | அச்சிடுங்கருவி இயக்குபவர் | | |
| (6) | துளையிடுங்கருவி இயக்குபவர் | | |
| (7) | துணையழுத்தக் கருவி இயக்குபவர் | | |
| (8) | வண்ணம் பூசுபவர் | | |
| (9) | மெருகேற்றுபவர் | | |
| (10) | மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய ஓரளவு பயிற்சிப் பெற்ற வகையினர் | | |
| **(ஈ) பயிற்சி பெறாதோர்:** | | | |
| (1) | உதவியாள் | 7134.00 | 7006.00 |
| (2) | சுத்தம் செய்பவர் | | |
| (3) | மஸ்தூர் | | |
| (4) | சிப்பமாக்குபவர் | | |
| (5) | மேலே வகைப்படுத்தப்படாத யாதொரு பயிற்சி பெறாத வகையினர் | | |

**விளக்கம்:-** (1) பணியாளர் மண்டலங்களின் வகைப்பாடும் பணியாளர்களின் வகைப்பாடும் வருமாறு:—

**(அ) மண்டலங்களின் வகைப்பாடு:**

மண்டலம் — அ: அனைத்து மாவட்ட தலைமையகங்கள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்

மண்டலம் — ஆ: ஏனைய பகுதிகள்

**(ஆ) பிரிவுகளின் வகைப்பாடு:**

**(i) உயரளவு பயிற்சி பெற்றோர்:**

உயரளவு பயிற்சி பெற்ற பணியாளார் என்பவர் திறமை அல்லது மேம்பட்ட அளவிலான கூர்மைத் தகுதி தேவைப்படுகின்ற ஒரு பணியினைச் செய்பவரும் மேற்பார்வையிடும் திறனும் உடையவராவார்.

**(ii) பயிற்சி பெற்றோர்:**

பயிற்சி பெற்ற பணியாளர் என்பவர் ஒரு பணியைத் தனித்துச் செயலாற்றித் திறம்பட முடித்து மிகச் சரியான பணித்திறத்தை வெளிப்படுத்தும் தகுதி மிக்கவர் ஆவார். தேவையேற்படும் போது சிறு மின் சுற்று வரைபடங்களை அறிந்து அதில் பணி செய்யும் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

**(iii) ஓரளவு பயிற்சி பெற்றோர்:**

ஓரளவு பயிற்சி பெற்ற பணியாளர் என்பவர் குறிப்பிடப்பட்டதொரு தொழிலில் பணிசெய்யும் அறிவைப் பெற்றிருப்பவர் அல்லது எளிய சிறு கருவிகள் மற்றும் இயந்திரங்கள் உதவியுடன் அந்த எளிய பணியை செய்பவர் ஆவார்.

**(iv) பயிற்சி பெறாதோர் :**

பயிற்சி பெறாத பணியாளர் என்பவர் தனிப் பயிற்சி எதுவும் பெறாதவர் ஆவார். பழக்கப்பட்ட பணிச்சூழல் அவசியமென்றபோதிலும், குறைவான செயல்பாடு அல்லது தன்னிச்சையான முடிவு அல்லது முன் அனுபவம் ஏதுமற்ற எளிதான பணிகளை மேற்கொள்பவர் அவருடைய பணியானது பொருட்கள் அல்லது சரக்குகள் வகையில் தேவைப்படலாம்

**(2) அகவிலைப்படி:-** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு ரூ.43.50/– (நாற்பத்து மூன்று ரூபாய் ஐம்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளில் கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்கவேண்டும்.

(5) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 84, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 8 ஜூலை 2022.]*

1976 ஆம் ஆண்டு சம மதிப்பூதியச் சட்டத்தின் (மத்திய சட்டம் (25/1976) 9 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (வழங்கப்படுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 4–11–2015 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல், 726–728 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/தொவே/645/2015 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், 27.09.2017 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல், 787ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/தொவே/807/2017 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் வேலையளிப்பவர்களால் இணக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றனவா என்பன குறித்த விசாரணையை மேற்கொள்வதற்காக, கீழேயுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிடப்படுள்ள நபர்களை ஆய்வாளர்களாக இதனால் நியமிப்பதுடன், மேலும், அந்த அட்டவணையின் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, அவர்கள் அத்தகைய விசாரணையை மேற்கொள்ள வேண்டிய உள்ளூர் வரம்புகளையும் வரைறை செய்கிறார்.

**அட்டவணை**

| தொடர் எண் | நபர்கள் | பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தொழிலாளர் துறை ஆணையர். | தமிழ்நாடு மாநிலம் முழுவதும் |
| 2. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் (இசைவிணக்கம்), சென்னை. | |
| 3. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் (நிருவாகம்) சென்னை. | |
| 4. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் (ஆய்வுகள்), சென்னை. | |
| 5. | தொழிலாளர் துறை சிறப்பு இணை ஆணையர், சென்னை. | |
| 6. | தொழிலாளர் துறை இணை ஆணையர் (குறைந்தளவு ஊதியங்கள்), சென்னை. | |
| 7. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர், சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 11. | தொழிலாளர் துறை இணை ஆணையர்–I, சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் எல்லைகளுக்குள் வரும் பகுதிகள் நீங்கலாக சென்னை மாநகராட்சி. |
| 12. | தொழிலாளர் துறை இணை ஆணையர்–II, சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்கள். |
| 13. | தொழிலாளர் துறை இணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 14. | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 15. | தொழிலாளர் துறை இணை ஆணையர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 16. | தொழிலாளர் துறை இணை ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 17. | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருநெல்வேலி. | தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 18. | தொழிலாளர் துறை இணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் திருப்பூர் மாவட்டங்கள். |
| 19. | தொழிலாளர் துறை இணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 20. | தொழிலாளர் துறை இணை ஆணையர், ஈரோடு | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்கள். |
| 21. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர்–I, அலுவலகம், சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் எல்லைகளுக்குள் வரும் பகுதிகள் நீங்கலாக சென்னை மாநகராட்சி |
| 22. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர்–II, அலுவலகம், சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |

| தொடர் எண் | நபர்கள் | பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 23. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், வேலூர். | வேலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 24. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர், அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, அரியலூர். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 25. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர், அலுவலகம், மதுரை. | மதுரை, சிவகங்கை இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| 26. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர், அலுவலகம், திண்டுக்கல். | திண்டுக்கல் தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 27. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர், அலுவலகம், திருநெல்வேலி. | தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |
| 28. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 29. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையர் அலுவலகம், சேலம். | சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்கள் |
| 30. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (மலைத் தோட்டப் பயிர்) | 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்திய சட்டம் (69/1951) கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள் |
| 31. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (மகளிர் நலன்), சென்னை | சென்னை, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| 32. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (மகளிர் நலன்), திருநெல்வேலி. | திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| 33. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (மகளிர் நலன்), கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 34. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) | 2009 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் (மத்திய சட்டம் I/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள் |
| 35. | அனைத்து தொழிலாளர் துறை இணை ஆய்வாளர்கள் | |
| 36. | அனைத்து தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள் | |
| 37. | மேம்பாட்டு ஆணையர்கள், தமிழ்நாட்டின் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் |
| 38. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதும் |
| 39. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை முதுநிலை கூடுதல் இயக்குநர் | |
| 40. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை முதுநிலை கூடுதல் இயக்குநர் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள்) | |
| 41. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர்கள் | |
| 42. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் | |
| 43. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு) | |
| 44. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) | |

| தொடர் எண் | நபர்கள் | பகுதிகள் |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 45. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் (பதிவு செய்தல்) | |
| 46. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர் (பயிற்சி மையம்) | |
| 47. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு) | |
| 48. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி | |
| 49. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள் I, II, III (பயிற்சி மையம்) | |
| 50. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை உதவி இயக்குநர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) | |
| 51. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை உதவி இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு) | |
| 52. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை உதவி இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி. | |
| 53. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள் | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 63/1948) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள் |
| 54. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் உதவி இயக்குநர்கள் | |
| 55. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள்) | 1996 ஆம் ஆண்டு மத்திய சட்டம் 27/1996) கட்டுமானம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதல், பணி நிலைமைகளும்), சட்டத்தின் 42 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள் |
| 56. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள்) | |
| 57. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை உதவி இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள்) | |
| 58. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் (விருதுநகர் பட்டாசு தொழிற்சாலைகளுக்காக நடமாடும் குழு) | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 63/1948) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள் |
| 59. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர் (விருதுநகர் பட்டாசு தொழிற்சாலைகளுக்காக நடமாடும் குழு) | |

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.